**ஊடக அறிக்கை** : HRC/P/i/T/08/01/24

# ஊடக அறிக்கை

'யுக்திய' நடவடிக்கை

இலங்கை பொலிஸ் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் 'யுக்திய' எனும் செயற்ப்பாட்டின் கீழ் அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான அறிக்கைகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இரண்டு வாரங்களில் அதாவது 2023 மார்கழி 17 முதல் மார்கழி 31 வரை 20,000 க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள்பாதுகாப்பு அமைச்சு அறிவித்ததும் கூறிப்பிடத்தக்கது.

யுக்திய நடைமுறையின் நோக்கம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது ஒரு நோக்கமாகும். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது ஒரு முக்கிய நோக்கம் என்பதனை ஆணைக்குழுவும் ஏற்றுக்கொள்கின்றது. எவ்வாறாயினும், 'யுக்திய' நடவடிக்கையுடன் தொடர்புடைய சித்திரவதை, கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை மற்றும் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு பல முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அண்மைய அறிக்கை, மேற்படி நடவடிக்கை தொடர்பில் கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளதையும் நாம் கவனத்தில் கொள்கிறோம். அதற்கேற்ப இந்த நடவடிக்கையானது பரவலான அநீதியின் அறிக்கைகளுடன் தொடர்புடையதாக மாறியுள்ளது, அதன் தலைப்பே 'யுக்திய' ('நீதி' என சிங்கள மொழியில் பொருட்படும்) என்பது ஒரு தவறான பெயராகும்.

இலங்கை அரசியலமைப்பின் 11 வது உறுப்புரையின் கீழ் சித்திரவதை அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகை அல்லது தண்டனையிலிருந்து விடுபடுவதற்கு இலங்கையில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் அடிப்படை உரிமை உண்டு என்பதை ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்துகிறது. இந்த உரிமையானது முழுமையானதும் மற்றும் பிரிக்க முடியாததும் மற்றும் எந்த சூழ்நிலையிலும் கட்டுப்படுத்தப்படக்கூடாததுமாகும். குற்றங்களை விசாரிப்பதற்கும் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கும் பொறுப்பான காவல்துறை அதிகாரிகள் எல்லா நேரங்களிலும் இந்த உரிமையை மதிக்க வேண்டும். இது சந்தேக நபர்களை

கண்ணியத்துடன் நடத்துவத்தை உறுதி செய்கின்றது. காவல்துறையினரால் நடத்தப்படும் தேடுதல் நடவடிக்கைகளின் போது இளைஞர்கள் உட்பட நபர்களை கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான முறையில் நடத்துவது பற்றிய அறிக்கைகளை அறிந்து ஆணைக்குழு வருத்தமடைந்துள்ளது. அதன்படி அவ்வாறான அறிக்கைகள் தொடர்பில் விசாரணை நடாத்த ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

2023ல் மட்டும் 200க்கும் மேற்பட்ட சித்திரவதை முறைப்பாடுகளை ஆணைக்குழு பெற்றுள்ள சூழலில் இந்த அறிக்கைகள் மிகவும் மோசமானவை. மேலும் சித்திரவதைக்கு காரணமானவர்களென இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் அண்மைக்கால தீர்ப்புகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு உத்தரவிடப்பட்ட நிலையிலும் சித்திரவதையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தொடர்ந்து பதவியில் உள்ளனர் என்பது அவதானிக்கத்தக்கது. உதாரணமாக வெஹரகெதர ரஞ்சித் சுமங்கல எதிர் பண்டார பொலிஸ் அதிகாரி பொலிஸ் நிலையம், மிரிஹான மற்றும் பலர் SC-FR விண்ணப்ப இலக்கம் 107/2011 இல் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் சித்திரவதை செய்ததை நீதிமன்றம் கண்டறிந்து காவல்துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என உத்தரவிட்டது. மார்கழி 21, 2023 அன்று, ஆணைக்குழுவானது கௌரவ சட்டமா அதிபருக்கு இந்த அதிகாரிகள் மீது வழக்குத் தொடர ஊக்குவிக்கும் படி ஒரு கடிதத்தை எழுதியது. 28 மார்கழி 2023 திகதியிட்ட பதில் கடிதத்தில் ஆணைக்குழுவிற்கு கௌரவ சட்டமா அதிபர், சித்திரவதைச் செயல்களுக்குப் பொறுப்பான நபர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், [கௌரவ சட்டமா அதிபர்] திணைக்களத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன' என்று சட்டமா அதிபர் ஆணைக்குழுவிற்கு உறுதியளித்தார்.

அரசியலமைப்பின் உறுப்புரை 13(4) மூலம் பிரகாரம் மறைமுகமாக அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு நபரினதும் உயிர் வாழ்வதற்கான உரிமையையும் ஆணைக்குழு மேலும் வலியுறுத்துகிறது. சந்தேகநபர்கள் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்ற நிலையைப் பொருட்படுத்தாமல், இந்த அடிப்படை மனித உரிமையானது அனைத்து நபர்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், இலங்கை பொலிசார் சம்பந்தப்பட்ட தடுப்பு மற்றும் அவை சார்ந்த மரணங்களின் நிகழ்வு ஒரு தீவிர சவாலாக இருந்து வருகின்றன. உண்மையில் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில், ஆறு (6) காவலில் வைக்கப்பட்ட மரணங்கள் மற்றும் இரண்டு (2) நீதிக்குபுறம்பான மரணங்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆணைக்குழு பெற்றுள்ளது. அச்சபவங்களை தொடர்ந்து காவலில் வைக்கப்பட்ட நபர்களின் மரணத்திற்கு காவல்துறை அதிகாரிகளின் பொறுப்புக்குறித்து உயர் நீதிமன்றம் மீண்டும் முக்கிய தீர்ப்புகளை வெளியிட்டது. எடுத்துக்காட்டாக பாத்திமா ஷர்மிளா எதிர் நிலைய பொறுப்பதிகாரி, காவல் நிலையம், ஸ்லேவ் ஐலண்ட் மற்றும் பிறர், SC-FR விண்ணப்ப எண். 398/2008 இல் மரணத்திற்குக் காரணமான ஸ்லேவ் ஐலண்ட் காவல் நிலையத்தில் பல காவல்துறை அதிகாரிகள் உள்ளனர் என்று உயர் நீதிமன்றம் கண்டறிந்து, மனுதாரரின் மனைவிக்கு இந்த அதிகாரிகளை இழப்பீடு வழங்க உத்தரவிட்டது. ஆணைக்குழுவானது உண்மையில் சமீபத்தில் கௌரவ சட்டமா அதிபரிடம் இந்த அதிகாரிகள் மீது வழக்குத் தொடர வேண்டும் என்பதை ஊக்குவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இருப்பினும் வரைவு வழிகாட்டுதல்கள்

மற்றும் பரிந்துரைகள் வெளியிடப்பட்ட ஒரு சில நாட்களுக்குப் பிறகு போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக 'அதிகபட்ச பலம்' பயன்படுத்தப்படும் என்ற பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையை அறிந்து ஆணைக்குழுவானது கலக்கமடைந்துள்ளது. மேலும் இவ்வாறான நபர்களை கைது செய்யும் பொழுது போலீஸ் துப்பாக்கிச் சூடு கூட ஏற்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் உறுப்புரை 13(1), (2), (3) மற்றும் (5) ஒவ்வொரு நபருக்கும் தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைத்தல் மற்றும் வேறு வகையில் சொந்த சுதந்திரம் பறிக்கப்படுதல் போன்ற நடவடிக்கையில் இருந்து உத்தரவாதம் தருவதுடன், மேலும் இவை ஒரு நீதிபதியின் உத்தரவின் பேரில், மற்றும் ஒரு நியாயமான ஒரு விசாரணைக்காக மட்டுப்படுத்தப்படலாம் என்பதுடன், முறையே குற்றவாளி என்று நிரூபிக்கப்படும் வரை அந்நபர் நிரபராதி என்று கருதப்படும் உரிமையும் உடையவராவார். இவ்வாறான அடிப்படை உரிமைகளே இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பின் அடித்தளமாகவும் அமைகின்றன. போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்துப் போராடுவது என்ற போர்வையில் நபர்கள் மற்றும் தனியார் சொத்துக்களைக் கைப்பற்றுதல் மற்றும் அழித்தல், மற்றும் பலவந்தமாகத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகியவை நாடு முழுவதும் முறையான அடிப்படை உரிமை மீறல்களை ஏற்படுத்தும் என்ற அபயமும் உள்ளது.

மேலும் தனியார் வீடுகளில் சோதனை நடத்துதல் மற்றும் சந்தேக நபர்களை கைது செய்யும் போது ஊடகவியலாளர்கள் காவல்துறையினருடன் வருவதாகவும், அத்தகைய நடவடிக்கைகளின் வீடியோ காட்சிகள் தேசிய ஊடகங்களில் ஒளிபரப்பப்படுவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. அத்தகைய நடவடிக்கை தனிநபர் சுதந்திரம் மற்றும் உரிமையை கடுமையாக மீறுவதாகக் கருதுவதுடன், ஆணைக்குழுவானது அது தொடர்பான நினைவூட்டுதல் 23 செப்டம்பர் 2021 அன்று அப்போதைய பொலிஸ் மா அதிபருக்கு (IGP) அனுப்பியதுடன் அவ் ஆலோசனையை மீண்டும் வலியுறுத்துகிறது. 2022 பிப்ரவரி 14 அன்று அப்போதைய பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை எண். RTM-382 ஐ ஆணைக்குழுவின் ஆலோசனையைக் குறிப்பிட்டு, ஊடகங்கள் வழியாக சந்தேக நபர்களைக் கைது செய்வது தொடர்பான படங்கள் மற்றும் காட்சிகளை அனுமதியின்றி பரப்புவதைத் தடைசெய்ததை மீண்டும் நினைவூட்டுகின்றது. இத்தகைய தனிமனித உரிமை மீறல்கள், S.C. Ref 01/2008 இல் குறிப்பிடப்படுள்ளவாறு உயர் நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்தின்படி, தொடர்புடைய ஊடக நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும் என்றும் ஆணைக்குழு குறிப்பிடுகிறது.

ஆணைக்குழுவானது இலங்கையில் உள்ள சிறைச்சாலை அமைப்பு பற்றிய தனது சமீபத்திய ஆய்வையும், சிறைச்சாலைகளில் அதிக நெரிசல் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான அதன் பரிந்துரைகளையும் நினைவுபடுத்துகிறது. 'யுக்திய' நடவடிக்கையின் கீழ் கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள் அதிகரித்து இந்த நிலை மேலும் சிக்கலை மோசமாக்கும் என்பதில் சந்தேகமில்லை. தடுப்புக்காவலுக்கு மாற்று வழிகளை அறிமுகப்படுதும் நீதி அமைச்சின் முற்போக்கான சீர்திருத்தங்களை இவ்வாறான நடவடிக்கைகள் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்பதும் திண்ணம்.

நீதியை நிலைநாட்டுவதற்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும் இலங்கையின் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் முறையாகத் தவறிவிட்ட நிலையில், ‘யுக்திய’ நடவடிக்கையை ‘நீதியை’ முன்னெடுப்பதாகக்

கூறிக்கொண்டு தொடர்ந்து அமுல்படுத்துவது பொருத்தமற்றது என ஆணைக்குழு குறிப்பிடுகிறது. சித்திரவதை, தடுத்து வைத்தல் மரணம் மற்றும் நீதிக்குபுறம்பான மரணங்கள், மற்றும் தன்னிச்சையான கைதுகள் என்பன, நாட்டின் உயர் நீதிமன்றத்தால் கண்டறியப்பட்டாலும், சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் தன்மை இன்மையால், இலங்கையில் இன்று நீதியை பொறுத்த வரையில் முதன்மையான சவாலாக, தண்டனையிலிருந்து விடுபடாத ஒரு கலாச்சாரம் காணப்படுகின்றது. அதன்படி ஆணைக்குழுவானது, மேன்மை தங்கிய ஜனாதிபதி, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை அரசாங்கத்திடம் விகேட்டுக்கொள்வதாவது என்னவெனில், சட்ட அமலாக்கத்திற்கான தற்போதைய அணுகுமுறைக்கு அதிக கவனம் செலுத்தி, சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களை அர்த்தமுள்ள வகையில் சீர்திருத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் சட்ட ஆட்சி மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும் என கேட்டுக்கொள்கின்றது.

ஊடக பேச்சாளர்
மனித உரிமைகள் ஆணைக்குழு

8 தை 2024